**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**MCOP 364/2019**

பெயர் ராதிகா, (ம.சா.2.)
க/பெ. அன்பழகன்.
தேதி :– 23.04.2025.
சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது

**குறுக்கு விசாரணை:–**

எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. இறந்துபோன குமார் என்பவர் என்ன உறவு முறை என்றால் அண்ணன் முறையாவார். விபத்து சம்பந்தமாக காவல் துறையிலிருந்து விசாரணை மேற்கொண்டார்களா என்றால் இல்லை. குமார் என்பவர் கடலூர் மாவட்டம், வடக்குகொளக்குடியைச்சேர்ந்தவர் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படம் சம்பவ இடம் கடக்கம் காலணித்தெரு என்றால் சரிதான். கடக்கம் என்ற ஊர் காரைக்கால் எல்லை ஓரப்பகுதிக்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி காரைக்காலுக்கு அருகில் உள்ளதால் மனுதாரர் குமார் மது அருந்திவிட்டு அதிவேகமாகவும், ஆஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து அவரே விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி நேரில் எதுவும் தெரியாது என்றாலும், விபத்தில் இறந்துபோன குமார் நெருங்கிய உறவினர் என்பதால் எதிர்மனுதாரர் மீது பொய்யாக குற்றம் சாட்டுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் நான் சம்பவத்தின்போது அருகில் இருந்தேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்காத காரணத்தினால் தான் காவல் துறையினர் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.